ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1643/20 - 2010 මාර්තු 02 වැනි අඟහරුවාදා - 2010.03.02
*1643/20 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

**பிரகடனம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் இரண்டாம் நாள் நடைமுறைக்கு வந்துள்ளதாக வெளிப்படுத்தும் (இதனகத்துப்பின்னர் "அவசரகாலப் பிரகடனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரகடனமொன்று, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 155 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் பிரகாரம், அவசரகாலப் பிரகடனம் ஆக்கப்படுவதைப் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கச் செய்யப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன் சொல்லப்பட்ட பிரகடனம் வெளியிடப்பட்ட தினத்தன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கின்றதாதலாலும், அதன் விளைவாக அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் (i) ஆம் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு பத்து நாட்களினுள் பாராளுமன்றம் கூடுவதற்கான பிரகடனமொன்று வழங்கப்பட வேண்டியுள்ளதாதலாலும் ;

ஆகவே, அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின (i) ஆம் உட்பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இப்பிரகடனத்தின்மூலம், அவசரகாலப் பிரகடனம் ஆக்கப்படும் நிகழ்வு பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படுதற்பொருட்டும் அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதற்பொருட்டும் 2010, மாச்சு மாதம் ஒன்பதாம் நாளன்று மு. ப. 9.30 மணிக்குக் கூடும்படி பாராளுமன்றத்தை அழைக்கின்றேன்.

இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு மாச்சு மாதம் 2 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

3-647

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.